**மார்ச் – 18**

**"நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, யேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். - 1பேது 1 : 13**

ஒரு நீண்ட அசையாத, உறுதி கொண்ட முயற்சிக்காக, "உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவராயிருங்கள்." உணர்ச்சி வசப்படவும், உணர்ச்சிவசப்பட்ட மனநிலையின் தூண்டுதலினாலே உங்களுடைய எல்லா ஆவிக்குரிய உற்சாகத்தையும் மிகவும் குறைந்த சமயத்தில் செலவழித்த பிறகு குளிரிலும் அதைரியப்படுதலிலும் பின்வாங்கிப் போகவும், உங்களை அனுமதியாதிருங்கள். ஜெயங்கொள்ளுகிறவனாக நிரூபிக்கவும், ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற ஆசிர்வாதமான பலனுக்குத் தகுதியாவதற்கு அவசியமாகும் எல்லா ஒழுங்கையும், விசுவாசத்தின், பொறுமையின் சோதனையையும் வெகு நாட்கள் பொறுமையுடன் சகிப்பதற்காக இவைகளை எல்லாம் சேர்த்து ஆலோசனை செய்யவும், ஆயத்தம் பண்ணவும் கவனமாகக் கஷ்டப்பட்டு முயற்சி செய்யுங்கள். நமக்கு முன் வைத்திருக்கிற ஓட்டமானது, கொஞ்சம் ஓடி, பிறகு நின்று, பிறகு திரும்பவும் ஓடத் துவங்குவதுமான ஒன்றல்ல. ஆனால், "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து" ஓட வேண்டிய ஓட்டமாகும். **-Z '03, 54 (R 3149).**

ஊழியத்திற்குத் தயாராக இருக்கத் தக்கதாகக் கிறிஸ்தவன் தன் அறிவை ஒழுங்கு படுத்தி எப்பொழுதும் நிற்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்ட நிலையில்லல்ல, ஆனால், தெளிந்த புத்தியுடன் கூடிய கவனம் மனதின் பழக்கங்களை வெளிப்படுத்த வேண்டும். இந்தக் குணத்தோடு கர்த்தரின் இரண்டாம் வருகையின் காலத்தில் அவன் அடையப்போகும் மகிமையான பரிசுக்காகக் கிரியை நடப்பிக்கவும், ஜீவிக்கவும், நிலை நிற்கவும் இடையறாத ஒரு ஏவுதலாக இருக்கும். **-P '26, 28.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

லூக் 12:34,35; ரோம 13:13; எபே 6:14; 1தெச 5:6,8; 1பேது 4:7; 5:8; 1கொரி 1:7; பிலி 3:20; தீத் 2:13; எபி 6:18,19; 2பேது 3:12. **கோபுர வாசிப்பு : Z '15, 179 (R 5035).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் ஊழியத்திற்கு ஆயத்தமாகவும், ஆசிர்வாதத்தின் நம்பிக்கை நிறைந்தவனுமாய் நான் தெளிந்த புத்தியுள்ளவனாயிருந்தேனா? இல்லையா? இது என்னை எவ்வாறு பாதித்தது?